வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந,க.எண்.4454/அ4/2024 நாள் : 08.11.2024

பொருள்: பள்ளிக்கல்வி – வேலூர் மாவட்டத்திலுள்ள மாதிரி பள்ளி (Model School) – அரசு நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை எதிர்வரும் கல்வி ஆண்டு 2025 – 2026இல் மாவட்ட மாதிரிப் பள்ளிகளில் சேர்க்க உரிய நடவடிக்கை மேற்கொள்வது சார்ந்து கூட்டம் நடைபெறுதல் – தொடர்பாக

பார்வை : தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (தொழிற்கல்வி) அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.069824/பிடி2/இ2/2024 நாள். .11.2024

-----

வேலூர் மாவட்டத்தில் அரசு பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை 2025–2026ஆம் கல்வியாண்டில் மாதிரிப் பள்ளியில் சேர்க்க நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு காட்பாடி, காந்தி நகர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி அலுவலக வளாகத்தில் நாளை (09.11.2024அன்று) 02.00 மணியளவில் நடைபெறும் கூட்டத்திற்கு அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை மற்றும் தொடக்க கல்வி), அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள், அனைத்து அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள் பங்கேற்க வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

இடம்: – ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி அலுலவகம்
(SSA Office, Katpadi, Vellore)
காந்தி நகர், காட்பாடி, வேலூர் மாவட்டம்.

நாள் மற்றும் நேரம்:– 09.11.2024 அன்று மதியம் 02.00 மணி

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர் – 9.

பெறுநர்,
1. மாவட்டக் கல்வி அலுவலர்கள்
(இடைநிலை/தொடக்க கல்வி)
மாவட்டக்கல்வி அலுவலகம்,
வேலூர் மாவட்டம்.
2. வட்டாரக் கல்வி அலுவலர்கள்.
3. அனைத்து அரசு உயர்/மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள், வேலூர் மாவட்டம்.